# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 06 வியாழக்கிழமை 22.08.2024 கதிர் 339







# உள்ளூராட்சி மன்ற தேர்தலை விரைவில் நடத்த வேண்டும்

## உயர் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

**கடந்த வருடம் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடத்தப்படவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தமைக்கு எதிராக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் என்ற வகையில் ஜனாதிபதியும், நிதியமைச்சரும் அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.**

**அதன்படி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.**

**ஐக்கிய மக்கள் சக்தி , தேசிய மக்கள் சக்தி , மாற்றுக் கொள்கை மையம் மற்றும் பெ∴ப்ரல் அமைப்பு தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுக்கள் மீதான தீர்ப்பின் போதே, மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

2➤



## சிந்துஜாவின் மரணத்துடன் தொடர்புபட்ட வைத்தியர் பணி இடைநிறுத்தம்

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரியான இளம் குடும்ப பெண் ஒருவரின் மரணத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் வைத்தியர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் ம வைத்தியர் அஸாத் எம் ஹனீபா தெரிவித்தார்.

குழந்தையைப் பிரசவித்த 27 வயதான மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரி பெண் அதிக குருதி போக்கு காரணமாக கடந்த மாதம் 28ஆம் திகதி மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

எவ்வாறாயினும் அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கிருந்த வைத்தியர் அவருக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கவில்லை என்றும் வைத்தியர்களின் அசமந்த போக்கு காரணமாக அவர் உயிரிழந்ததாகவும் குற்றஞ் சாட்டப்படுகிறது.

இந் நிலையில் குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கமைய ஏற்கனவே நால்வர. பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். இரண்டு தாதியர்களுக்கும் இரண்டு குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்களே இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில், குறித்த வைத்தியருக்கான பணி இடைநிறுத்தம் தொடர்பான கடிதம் நேற்று புதன்கிழமை (21) தனக்கு கிடைத்துள்ளதாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஸாத் எம் ஹனீபா தெரிவித்துள்ளார்.

## மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோரை முக்கியமான பதவிகளில் அமர்த்தக்கூடாது

### ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் அறிக்கை



மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் என்று நம்பகதன்மை மிக்க விதத்தில் குற்றச்சாட்டப்படுபவர்களை உயர் பதவிகளில் அமர்த்தக்கூடாது. அவர்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம், பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை குறித்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாள Volker Türk வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. இன்று வெளியிடப்பட்ட இந்த விரிவான அறிக்கையில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு -

“அரசாங்கத்தின் உயர்பதவிகள், பாதுகாப்புதுறை, இராஜதந்திர பதவிகள், என்பவற்றை வகிக்கும் நபர்கள் மீது மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகத்தன்மை மிக்க குற்றச்சாட்டுகள் வெளியானால், அவர்களை அதிகாரத்திலிருந்து நீக்குதலை முன்னெடுக்கவேண்டும். மேலும் அத்தகையவர்களை நியமனம் செய்தலை தவிர்க்கவேண்டும்.

மேலும் நிலைமாற்றுக்கால நீதியை ஏற்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் அமைப்பில் அவ்வாறான நபர்கள் இடம்பெற்றிருந்தால் அவர்களை நீக்கவேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக முன்வைக்கப்படும் சட்டவாக்கம் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துடன் பொருந்திச்செல்வதாக காணப்படவேண்டும். இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல விடயங்கள் இதில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

## பொது வேட்பாளருக்கு நான் ஆதரவு இல்லை

### ஓய்வுபெற்ற மட்டு ஆயர்

“தமிழ்ப் பொது வேட்பாளருக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பூரண ஆதரவு என்று ஊடகங்களில் வெளிவந்த செய்தி மற்றும் நாடாளுமன்ற உறப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியனன் ஆகியோரைத் தவறாக நான் பேசியதாக ஊடகங்களில் வெளிவந்த செய்தி அனைத்தும் நான் தெரிவிக்காதமைக்கு உண்மைக்குப் புறம்பாகத் திரிவுபடுத்திப் பொய்யாக வெளியிடப்பட்டுள்ளன” என்று ஓய்வுபெற்ற மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் வண. ஜோசப் பொன்னையா தெரிவித்தார்.

மட்டக்களப்பு, தாண்டவன்வெளி முதியோர் இல்லத்தில் இன்று வியாழக்கிழமை நடத்திய விசேட ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நான் ஓய்வுபெற்று தங்கியிருக்கும் நிலையில் என்னைப் 2➤

## வாக்காளர் அட்டை செப் 8 விநியோகம்

2024ஆம்ஆண்டுஜனாதிபதித்தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்கு அட்டைகள் விநியோகம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார். அதற்கமைய எதிர்வரும் செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதி விசேட தினமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை இந்த விநியோகம் இடம்பெறும் என அவர் தெரிவித்தார். அன்றைய தினம் வீட்டிலேயே தங்கி அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மக்களிடம் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளார். வீடு வீடாகச் சென்று வாக்கு அட்டைகள் விநியோகம் செப்டம்பர் 14 ஆம் திகதியுடன் முடிவடையும் என்றும் அதன் பிறகு வீடு வீடாகச் சென்று வாக்கு அட்டைகள் விநியோகம் நடைபெறாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தேர்தல் நாள் வரை, அவர் கடிதங்களைப் பெறும் தபால் நிலையத்திற்குச் சென்று, சாதாரண நேரங்களில் தனது அடையாளத்தை உறுதிப்படுத்தி, தனது கையொப்பத்தைப் பயன்படுத்தி தனக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ வாக்கு அட்டைகளை பெற முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

# நாணய நிதியத்துடனான உடன்பாட்டில் மாற்றம் செய்தால் பெரும் இழப்பு வரும்

## எச்சரிக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்துள்ள உடன்படிக்கை தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என சில ஜனாதிபதி வேட்பாளர்கள் மேடைகளில் கூறிய போதிலும், அவ்வாறு செய்வதால் நாட்டுக்கு கிடைக்க வேண்டிய பணத்தை இழக்க நேரிடும் என்றும் மீண்டும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் நிலை ஏற்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை நிபுணர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஒரு நாடாக முன்னோக்கிச் செல்வதற்கு நிலையான பொருளாதாரம் அவசியம் எனவும், சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சீனா எக்சிம் வங்கி மற்றும் 17 நாடுகளுடன் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து சலுகைகளையும் அரசாங்கம் இதுவரையில் பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதில் நிர்மாணம் மற்றும் அபிவிருத்தித் துறைக்கு முக்கிய பங்கு உள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கடந்த பொருளாதார நெருக்கடியை அடுத்து வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள் நிறுத்தப்பட்டதால் நிர்மாணத் துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும், வங்கிச் சலுகைகள் வழங்குதல், நிர்மாணப் பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களுக்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளைச் செலுத்துவது போன்ற இத்துறையில் பணிபுரிவோர் மீது சுமத்தப்பட்டிருந்த சுமையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததையும் நினைவு கூர்ந்தார்.

தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டு, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து புதிய முதலீடுகள் ஈர்க்கப்படும் போது நிர்மாணத்துறையும் வளர்ச்சியடையும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அத்துடன், கொழும்பு, பிங்கிரிய, திருகோணமலை, யாழ்ப்பாணம், கண்டி, காலி, ஹம்பாந்தோட்டை ஆகிய புதிய முதலீட்டு வலயங்களில் சுற்றுலா ஹோட்டல் அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்தல், பெருநகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொழும்பு, காலி மற்றும் கண்டியை அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி விளக்கமளித்தார்.

# ஐ.எம்.எப். உடன்படிக்கையில் மாற்றங்களைச் செய்வேன்

## மீண்டும் உறுதியளிக்கிறார் சஜித் பிரேமதாச

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்படிக்கையில் மாற்றங்களை மேற்கொள்வேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித்பிரேமதாச மீண்டும் வாக்குறுதியளித்துள்ளார். சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்படிக்கை பொருளாதார வளர்ச்சி குறித்து கவனம் செலுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். தொழில்சார் வல்லுனர்களின் தேசிய பேரவை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அரசாங்கம்கடன்பேண்தகுதன்மை குறித்து மாத்திரம் கவனம் செலுத்தக்கூடாது,வர்த்தகத்தின் ஏனைய விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தவேண்டும் என சஜித்பிரேமதாச தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கமும் சர்வதேசநாணயநிதியமும் 2029 இல் 3.1 வீத பொருளாதார வளர்ச்சி என்பதை ஏற்றுக கொண்டுள்ளன, இது போதுமானதல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார். நாங்கள் எங்கள் பொருளாதாரத்தை வளர்ச்சி பாதையை நோக்கி கொண்டு செல்லவேண்டும் என்று தெரிவித்துள்ள சஜித்பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தி பொருளாதார சீர்திருதத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கும் என தெரிவித்துள்ளார்.

### உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, விஜித் மல்லல்கொட, முர்து பெர்னாண்டோ, காமினி அமரசேகர மற்றும் யசந்த கோதாகொட உள்ளிட்ட ஐவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்தத் தீர்ப்பை அறிவித்துள்ளது.

கடந்த வருடம் நடைபெற்றிருக்க வேண்டிய தேர்தலை நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி அரசாங்கம் ஒத்திவைத்திருந்தது. தேர்தலுக்குத் தேவையான நிதி திறைசேரியால் ஒதுக்கப்படாமையால், நியமனப் பத்திரங்கள் கோரப்பட்ட நிலையில் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

### பொதுவேட்பாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வந்து சந்தித்துச் செல்கின்றனர். இந்தநிலையில் ஊடகவியலாளர்களும் வந்து என்னைச் சந்தித்துச் செல்கின்றனர். நான் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோருக்கு எதிராகவும் மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு பூரண ஆதரவாகவும் கருத்துத் தெரிவித்துள்ளதாகப் பொய்யான செய்திகள் வெளிவந்துள்ளன. எனவே, நான் அவ்வாறு எதுவும் தெரிவிக்கவில்லை. நான் சொல்ல விரும்புவது இதுதான், எமது நாட்டில் சுதந்திரம் வேண்டும். எல்லோரும் சுதந்திரமாகவும் சமாதானமாகவும் வாழவேண்டும். அதற்காக யார் யாருக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டுமே அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கவும். முடியாதவர்கள் பேசாமல்விடுங்கள் என்றேன். இப்படி நான் சொன்னதைத் திரிவுபடுத்திப் பொய்யான செய்திகளை சில ஊடகங்கள் வெளியிட்டுள்ளன."



## தமிழக வெற்றி கழகத்தின் கொடியை அறிமுகம் செய்து வைத்தார் விஜய்

தமிழக வெற்றிக் கழகத்தின் கட்சிக்கொடியை பனையூரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் விஜய் இன்று காலை 9.15க்கு அறிமுகம் செய்து வைத்துள்ளார்.

கட்சிகொடியின் மேலும் கீழும் சிவப்பு நிறமும் நடுவில் மஞ்சம் நிறமும் உள்ளது. கொடியின் நடுவில் வாகை மலர் இருக்க அதன் இருபுறமும் யானை உள்ளவாறு கொடி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் கட்சியை பிரபலப்படுத்தும் வகையில் பிரசார பாடல் அடங்கிய குறுந்தகடு வெளியிடப்பட்டது.

கவிஞர் விவேக் எழுதி தமன் இசையமைத்து இந்த பாடல் வெளியிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணம்

விழாவின் ஆரம்பத்தில் விஜய் உறுதிமொழி வாசிக்க கட்சி நிர்வாகிகள் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

## யுவதியின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - பாலைநகர் பகுதியில் யுவதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

யுவதியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை இளைஞர் எழுச்சி மாநாடு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர்களின் எழுச்சி மாநாடு "புதிய யுகம் நோக்கிய பயணம்" எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது பௌசி மைதானத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும் மயோன் கல்வித் திட்ட, சமூக அமைப்பின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா தலைமையில் இடம்பெறும் இந்த இளைஞர் மாநாட்டில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும் முன்னாள் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான அமீர் அலி கௌரவ அதிதியாகவும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும் அம்பாறை மாவட்ட செயற்குழு தலைவருமான அப்துல் ரசாக் ஜவாத், அ. இ. ம. கா. தேசிய அமைப்பாளர் அப்துல்லாஹ் மஹ்ஷுரூப், அ. இ. ம. கா. பிரதி தேசிய அமைப்பாளர் அஷ்ரப் தாஹீர், அ. இ. ம. கா. சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் ஐ.எல்.எம். மாஹீர், அ. இ. ம. கா. பிரதிச்செயலாளர் நாயகம் அன்சில் அல் – அமீரி, அ.இ.ம.கா பிரமுகரும் முன்னாள் பிரதேச செயலாளருமான ஏ.எல்.எம். சலீம் உட்பட கட்சியின் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ள மாபெரும் ஒன்றுகூடல் மாநாட்டில் பல பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகளும், மேடையை அலங்கரிக்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகும்

## இ.தொ.கா தலைவர் செந்தில் அறிவிப்பு

எதிர்வரும் 28 ஆம் திகதி ஜனாதிபதியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் மலையக மக்கள் மாத்திரமன்றி இலங்கை வாழ் தமிழர்களின் நலன்புரி திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்ரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் மீது நெல்லியடியில் கத்தி வெட்டு தாக்குதல்

## மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கைவரிசை



யாழ்ப்பாணம் - நெல்லியடி நகரில் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கத்தியால் வெட்டி காயப்படுத்திய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று இரவு 11 மணியளவில் நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு முன்புறமாக உள்ள எரிபொருள் நிலையத்தில் குறித்த வன்முறை சம்பவம் நடந்தது.

நெல்லியடி நகரிலுள்ள கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரே கத்தியால் வெட்டி காயப்படுத்தப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு இளைஞர்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு சென்று தகராறில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது, ஊழியரை திடீரென கத்தியால் வெட்ட ஆரம்பித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக சிசிரிவி காணொளியை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் நிலையத்தின் முன்பாகவே வன்முறை கும்பலைச் சேர்ந்தவர்கள் குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளது பலரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. (O1)








# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்று சாட்சியம்

காணாமல் போனோர் அலுவலகம் ஊடாக தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் சாட்சியமளிப்பு நிகழ்வு இன்று பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் தம்பலகாமம், கிண்ணியா, கந்தளாய், திருகோணமலை பட்டினமும் சூழலும் ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளை சேர்ந்தவர்கள் கலந்துகொண்டு ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தனர். முன்னர் அழைப்பு விடுக்கப்பட்டும் காணாமல் போனவர்களின் உறவுகள் சாட்சியமளிக்க தவறியவர்கள் இன்று சாட்சியமளித்தனர். இதில் மொத்தமாக 31 உறவினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதில் காணாமல் போனோர் பற்றிய அலுவலக உத்தியோகத்தர்கள், தம்பலகாமம் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# வேறு முகாம்களுக்குச் சென்றவர்கள் மீண்டும் இணைக்கப்பட மாட்டார்கள்

## நாமல் ஆதரவுக் கூட்டத்தில் மஹிந்த

இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி வேறு முகாம்களில் இணைந்தவர்கள் மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"இன்று சிலர் அவநம்பிக்கையில் உள்ளனர். சிலர் குறுகிய நன்மைகளுக்காக எங்களை விட்டுவிட்டு வேறு முகாம்களைத் தேடிச் சென்றனர். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், ஒரு நாள் மீண்டும் எங்கள் முகாமிற்கு வர வேண்டி ஏற்படும்" என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அநுராதபுரம் கட பனஹ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நாமல் ராஜபக்ஷவின் அங்குரார்ப்பண பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, அநுராதபுரத்தில் நடைபெற்ற இந்த முதலாவது பிரசாரக் கூட்டத்தில் அநுராதபுர மாவட்டத்திலிருந்து பொது ஜன பெரமுனவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் கலந்துகொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.




# பாலமுனை மு.கா அமைப்பாளர் அலியார் இடைநிறுத்தம்

## நிசாம் காரியப்பர் அறிவிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற கைகலப்பு சம்பவத்துடன்தொடர்புடையவராக கருதப்படும் கட்சியின் பாலமுனை பிரதேச அமைப்பாளர் ஏ.எல்.எம். அலியார், கட்சியின் மாவட்ட செயற்குழு மற்றும் உயர்பீட உறுப்பினர் பதவிகளில் இருந்து இரு வார காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று கட்சியின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் இன்று வியாழக்கிழமை அறிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழுக் கூட்டம் கடந்த 11 ஆம் திகதி அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு சக்கி மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டம் நிறைவுற்று தலைவர் மண்டபத்தில் இருந்து வெளியேறிய பின்னர் கட்சியின் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி குழப்பகரமான சூழல் ஏற்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரிப்பதற்காக கட்சியின் தவிசாளர் ஏ. எல். அப்துல் மஜீத், பிரதித் தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர் மற்றும் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர் ஆகியோர் அடங்கிய குழுவொன்றை கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் உடனடியாக நியமித்திருந்தார்.

கட்சியின் தவிசாளர் ஏ. எல். அப்துல் மஜீத், பிரதித் தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர் ஆகிய இருவரும் கூட்டம் நிறைவடைந்ததை தொடர்ந்து நெரிசல் காரணமாக ஏனையோர் மண்டபத்தில் இருந்து வெளியேறும் வரை காத்திருந்த வேளையில் அப்போது மண்டபத்திற்குள் நடந்த விடயங்களை நேரடியாக அவதானித்திருந்தனர். அதற்கு மேலதிகமாக சம்பவத்தின் பின்னணி குறித்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன் அடிப்படையில் தலைமையிடம் இக்குழு முன்வைத்த பரிந்துரைக்கு அமைவாக தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் கட்சியின் பாலமுனை பிரதேச அமைப்பாளர் ஏ.எல்.எம். அலியார், இரண்டு வார காலத்திற்கு கட்சியின் மாவட்ட செயற்குழு மற்றும் உயர்பீட உறுப்பினர் பதவிகளில் இருந்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருப்பதாக கட்சியின் செயலாளர் நிசாம் காரியப்பர் மேலும் தெரிவித்துள்ளார்.



# தென்னாபிரிக்கத் தூதுவரை சந்தித்தார் சிறீதரன் எம்.பி.

இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் சாண்டில் எட்வின் ஷால்க், துணைத் தூதுவர் றெனி எவர்சன் வர்ணி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்றைய தினம் கொழும்பிலுள்ள தென்னாபிரிக்கத் தூதரகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் போது, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்மக்களின் நிலைப்பாடு மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்த சாதகத் தன்மைகள் குறித்தும், ஈழத்தமிழர்கள் சார்ந்த அரசியல் முன்னெடுப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, காசாவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் (ICC) வழக்குத் தாக்கல் செய்துள்ள தென்னாபிரிக்கா, ஈழத்தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலைக்கும் சர்வதேச நீதியைப் பெற்றுத்தர முயற்சிக்க வேண்டும் என்றும், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரிலும் இதுவிடயம் சார்ந்து தங்களின் கரிசனையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், தென்னாபிரிக்கத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# இன்னும் 5 வருடங்களுக்கு சஜித் பொறுத்திருக்கலாம்

## தலதா அத்துகோரள தெரிவிப்பு



"தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற தலைவர்களான ரணில் விக்சூகிரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் இம்முறை பிரிந்து நின்று ஜனாதிபதித் தேர்தலில்போட்டியிடுவதனால் இந்தமுறை தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களிப்பதா சஜித்துக்கு வாக்களிப்பதா என்ற நெருக்கடிக்கு, குழப்பத்துக்கு ஆளாகியுள்ளனர்" என்றும் இதுதொடர்பில் செப்டம்பர் 21ஆம் திகதிக்கு பின்னர் தெரிந்து கொள்ள முடியும் என்றும் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகும் அறிவிப்பை விடுத்த ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட எம்.பி.யும் முன்னாள் நீதி அமைச்சருமான தலதா அத்துகோரள தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று புதன்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய நிலையில் நீண்ட விசேட அறிக்கையொன்றை விடுத்து தான் நாடாராளுமன்ற உறுப்பினர்பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்ததோடு அதற்கான காரணங்களை பட்டியலிட்டபோதே தலதா அத்துகோரள ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாசவும் பிரிந்து நிற்பது தவறானது என்ற கருத்தை முன்வைத்தார்.

"2005 ஜனாதிபதி தேர்தலில் எமது வேட்பாளர் ரணில் விக்ரமசிங்க தோல்வியடைய பிரதான காரணமாக தமிழ் மக்கள் வாக்களிக்காமையே இருந்தது" என்று தெரிவித்த தலதா அத்துகோரள, "ராஜபக்சவினரின் சதி நடவடிக்கைக்குள்சிக்குண்டு வடக்கு கிழக்கு மக்கள் வாக்களிப்பு பகிஷ்கரிப்புக்கு ஆளாகினர்" என்றும், அன்று அவர்கள் வழமைபோன்று வாக்களித்திருந்தால் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகி இருந்திருப்பார்" என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய தலதா அத்துகோரள, "2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச, சஜித் பிரேமதாச ஆகியோர் போட்டியிட்டபோது வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சஜித் பிரேமதசாவுக்கு வாக்களித்தார்கள்" என்றும் தெரித்தார்.

"காலாகாலமாக எமது அணிக்கு வாக்களித்துவந்த வடக்கு கிழக்கு மக்களுக்கும் இந்த முறை தீர்மானம் எடுக்க முடியாத நிலையை ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் ஏற்படுத்தி இருக்கிறார்கள்" என்று தெரிவித்த தலதா அத்துகோரள, "இந்த முறை தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற இவ்விரு வேட்பாளர்களும் பிரிந்து நின்று தேர்தலில் போட்டியிடுவதனால் இந்தமுறை தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களிப்பதா சஜித்துக்கு வாக்களிப்பதா என்ற நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்" என்று தெரிவித்தார்.

"எனவே சஜித் இன்னும் ஐந்து வருடங்களுக்குப் பொறுத்திருந்தால் இந்த பாரிய சவால் ஏற்பட்டிருக்காது" என்றும் தலதா அத்துகோரள தனது பதவியை இராஜினாமா செய்து நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையில் மேலும் தெரிவித்தார்.

# நல்லிணக்க ஆணைக் குழுவால் ராஜபக்ஷக்கள் சிக்கிக்கொள்வர்

## விமல் வீரவனன்ச தலைமையில் எதிர்த்து ஆர்ப்பாட்டம்



"உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுச் சட்டமூலத்தைப்பொறுத்தவரையில்எதிர்க் கட்சிகள் அமைதியாக இருக்கின்றன. அரசாங்க தரப்பில் நாமல் ராஜபக்ஷ போன்றவர்களின் அப்பா, சித்தப்பா ஆகியோரும் இதன் மூலமாக சிக்கிக்கொள்வர்" என்று தேசிய சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச எச்சரித்துள்ளார்.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுச் சட்டமூலத்திற்கு எதிராக சர்வஜன பலய கூட்டணியினரால் நாடாளுமன்றத்திற்கு அருகில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தேசிய சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்விமல்வீரவன்ச தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதுடன், இதில் சர்வஜன பலய கூட்டணிக்கு ஆதரவளிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அவர்களின் ஆதரவாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த சட்டமூலத்தை ஜனாதிபதி வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இல்லையென்றால் நாடாளுமன்றத்தில் அதனை தோற்கடிக்க நடவடிக்கை எடுப்போம் என்றும் விமல் வீரவன்ச தெரிவித்தார். அந்த ஆர்ப்பாட்டத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வீரவன்ச மேலும் கூறுகையில், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுதி நேரத்தில் உண்மைகளை கண்டறியும் ஆணைக்குழு தொடர்பான சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட்டுள்ளார்" என்றும், "இதற்கு முன்னர் இதனுடன் இணையும் 7 சட்டமூலங்கள் நாடாளுமன்கூறத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன" என்றும் தெரிவித்தார். "இந்த சட்டமூலங்களை ஒன்றிணைத்தால் நாட்டில் சுதந்திரமாக வீதிகளில் செல்லக்கூடிய வகையில் நிலைமைகளை ஏற்படுத்திய இராணுவத்தினருக்கு எதிராக பிணை நிராகரிக்கப்படும் வகையிலும் இராணுவத்தினருக்கு தண்டனை கொடுக்கும் அதிகாரங்களுடனான விசேட நீதிமன்றத்தை அமைக்கும் அதிகாரமும் கிடைக்கும்" என்றும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

"இது சர்வதேசத்தினால் நாட்டில் தலையிடக்கூடிய வகையிலான சட்டமூலமாகும். இதன் மூலம் சாட்சியாளர்களின் அடையாளங்களை மறைக்கவும் முடியும்" என்றும் தெரிவித்த விமல் வீரவன்ச, "இந்த விடயத்தில் எதிர்க்கட்சிகள் அமைதியாக இருக்கின்றன. அரசாங்க தரப்பில் நாமல் ராஜபக்ஷ போன்றவர்களின் அப்பா, சித்தப்பா ஆகியோரும் இதன் மூலமாக சிக்கிக்கொள்வர்" என்றும் எச்சரித்தார்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் குளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# ஓட்ட வீராங்கனை அகிலத்துநாயகி கனடா மூத்த தமிழரால் கௌரவிப்பு



கனடாவில் நடைபெற்ற 'வென்மேரி'சர்வதேச சாதனையாளர்கள் விருது வழங்கும் விழாவில் தனது கௌரவத்தைப் பெறுவதற்காக முள்ளியவளைக் கிராமத்திலிருந்து கனடாவிற்கு விஜயம் செய்திருந்த ஓட்ட வீராங்கனை திருமதி அகிலத்திருநாயகி கனடா- ஸ்ரோவில் நகர் வாழ் மூத்த தமிழர்களால் கௌரவிக்கப்பெற்றார்.

சுமார் முப்பத்தைந்து ஸ்டோவில் தமிழ் முதியோர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை, கார்னெல் சமூக மையப் பூங்காவில் கோடைகால ஒன்றுகூடலை நடத்தினார்கள். அந்த வைபவத்தில் ஓட்ட வீராங்களை திருமதி அகிலத்திருநாயகி கௌரவிக்கப்பெற்றார்.

இந்நிகழ்விற்கு திருமதி அகிலா திருநாயகி மற்றும் நிரன் ஜெயநேசன் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். திருமதி அகிலா திருநாயகி திருமதி ஞானேஸ்சிவாவினால் கௌரவிக்கப்பட்டதுடன், உறுப்பினர்களின் அன்பளிப்பை ஸ்டோவில் தமிழ் மூத்தோர் அமைப்பின் தலைவர் தேவ சோமசுந்தரத்தினால் வழங்கப்பட்டது.







# சிறுபொறி சஞ்சிகையின் ஓராண்டு நிறைவு நிகழ்வு

கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலகத்தின் வெளியீடாக மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு

வெளிவருகின்ற 'சிறுபொறி" சஞ்சிகையின் ஓராண்டு நிறைவு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு சுழிபுரத்தில் அமைந்துள்ள கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலகத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அதிதிகளாக வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார், வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செல்லத்துரை பிரணவநாதன், சங்கானை மற்றும் சண்டிலிப்பாய்

கோட்டங்களின் கல்விப் பணிப்பாளர் சூ. நோபேட் உதயகுமார் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த விழாவில் ஓவியப் போட்டி, திருக்குறள் போட்டி என்பனவற்றில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான

பரிசில் வழங்கலும் சிறுபொறி 5 இதழ் வெளியீடும் கலை நிகழ்வுகளும், மாவை நித்தியானந்தனின் எழுத்துருவில் சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் 'முட்டை" நாடக ஆற்றுகையும், ஓவியக் கண்காட்சியும் நடைபெறவுள்ளன.




# கனடாவில் செப்ரெம்பர் 1 இல் "பொங்கு தமிழ் 2024" நிகழ்வு

கனடா ஸ்காபுறோ நகரில் மோர்னிங்சைட்-பின்ச் சந்திக்கு அருகில் அமைந்திருக்கும் திறந்த வெளி மைதானத்தில் செப்டம்பர் 1 ஆம் திகதி பொங்கு தமிழ் -2024 என்னும் எழுச்சி விழா நடைபெறவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய தமிழ்ச் சமூகம் மற்றும் கனடிய தமிழ் மாணவர்கள் சமூகம் ஆகியவற்றின் சார்பில் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த எழுச்சி விழா தொடர்பான ஏற்பாடுகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தன்னாட்சி உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்ற தமிழர்களின் வேட்கையின் வெளிச்சமாகத் திகழும் இந்த கோட்பாடுகளை முன்வைத்து நடைபெறவுள்ள பொங்கு தமிழ் -2024 என்னும் எழுச்சி விழா சிறப்புற நடை பெற அனைவரையும் ஒத்துழைக்குமாறும் கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

# மழை வெள்ளத்தில் புத்தளம் சாஹிரா



(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

புத்தளத்தில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை நீரில் மூழ்கிய காட்சியை படத்தில் காணலாம்

மழை நீர் வழிந்தோடுதற்கான நிரந்தர தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கான முன்னெடுப்புக்கள் அவசியம் என்பது காலத்தின் தேவையாக இருக்கின்றது.

இது விடயத்தில் சம்மந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.




# வீதி விபத்துக்களில் 1,417 பேர் உயிரிழப்பு

இந்த வருடத்தில் இதுவரை 1,417 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வருடாந்தம் சுமார் 1,000 பேர் மோட்டார் சைக்கிள் விபத்துக்களால் உயிரிழக்கின்றனர் என்று போக்குவரத்துப் பிரிவுக்குப்பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

"வருடாந்தம் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீதி விபத்துகள் நடக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் இடம்பெறும் விபத்துக்களில் மூன்றில் ஒன்று மோட்டார் சைக்கிள் விபத்து. 2023இல் வீதி விபத்துகள் குறைந்துள்ளன. 2024 ஜனவரி 1 முதல் ஒகஸ்ட் 10 வரை, 1,352 ஆபத்தான வீதி விபத்துகளில், 1,417 பேர் உயிரிழந்துள்ளனர்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் 328 பாடசாலை மாணவர்கள் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஐஸ் பாதித்த மாணவன் வைத்தியசாலையில்

வவுனியா நகரையண்டிய பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 12 வயது மாணவன் ஒருவன் ஐஸ் போதைப் பொருள் பாவித்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவரது உடல்நிலை தேறிவருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா நகரையண்டிய பிரபல பாடசாலையில் தரம் 7 இல் கல்வி பயிலும் 12 வயது மாணவன் ஒருவன் பாடசாலைக்கு முன்பாகவுள்ள கடை ஒன்றின் அருகில் இருந்த ஒதுக்கு புறமான இடம் ஒன்றிற்கு சென்றுவிட்டு மீண்டும் பாடசாலைக்குள் சென்றுள்ளான்.

சிறிது நேரத்தில் மாணவன் தொடர்ச்சியாக வாந்தி எடுத்தமையால் பெற்றோருக்கு தெரியப்படுத்தி அவர்கள் ஊடாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்படுகின்றது.

# போதை பொருளுடன் 2 பொலிஸார் கைது

பிலியந்தலை பகுதியில் வைத்து போதைப்பொருளுடன் பொலிஸார் இருவர் கைது செய்யப்பட்டுள்தாக தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கிலோகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இவர்கள் மொரட்டுவ விசேட அதிரடிப்படை முகாமில் பணியாற்றுபவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.08.2024இல் வெளியிடப்பெற்றது.